# 16-10-2024 செய்தி

## காலநிலை மாற்றமும் தீவிர பாதிப்படையும் பெண்களும்

- காலநிலை மாற்றத்தினால் தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் தீவிர வானிலை நிகழ்வுகள், வெப்ப அலை, காற்று மாசு போன்றவை சர்வதேச அளவில் சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன.
- குறிப்பாக வயது, பாலினம், பொருளாதாரம் சார்ந்து காலநிலை மாற்றம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாக ஐக்கிய நாடுகள் அவையின் சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.
- காலநிலை மாற்றத்தின் விளைவால், வளரும் நாடுகளில் விளிம்புநிலை மக்களின் வாழ்வாதாரத்துக்குக் கூடுதல் நெருக்கடிகள் ஏற்படுவதாகவும், அதில் கூறப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற காலநிலை மாற்றம் குறித்து மாநாட்டில் (COP28) 2050க்குள் காலநிலை மாற்றத்தினால் 15.8 கோடி பேர் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவார்கள்; அதில் பெரும்பாலானவர்கள் பெண்களாக இருப்பார்கள் எனக் கணிக்கப்பட்டிருக்கிறது.
- அந்த வகையில், ஆண்களுடன் ஒப்பிடுகையில் காலநிலை மாற்றத்தினால் பெண்கள் அதிகமான பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

**அல்லலுறும் பெண்கள்**

- காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளால் முதன்மையாகப் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள்தான்.
- உலகளவில் தங்கள் பொருளாதாரத் தேவைகளுக்காக விவசாயம் போன்ற இயற்கை வளம் சார்ந்த தொழில்களையே பெண்கள் பெரும்பாலும் நம்பி உள்ளதே இதற்குக் காரணம்.
- வெள்ளம், வறட்சியினால் விவசாயம் பாதிக்கப்படும்போது அதைச் சார்ந்துள்ள பெண்களும் பாதிப்பை எதிர்கொள்கிறார்கள்.
- விவசாயம் மட்டுமல்லாமல் சமூகம், பொருளாதாரம், பாலினம், வாழ்வாதாரம், உடல்நலம், குடும்பம், கல்வி போன்ற பல்வேறு காரணிகள் சார்ந்தும் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள்.
- இன்றைக்கும் பெரும்பாலான நாடுகளில் குடும்பத்துக்காக உணவு, தண்ணீர், எரிபொருளை ஏற்பாடு செய்வது பாதுகாப்பது பெண்களின் பொறுப்பாகவே உள்ளது.
- அதுவும் குறைந்த – நடுத்தர வருமானம் உடைய நாடுகளில் விவசாயத் தொழிலாளர்களாக இருக்கும் பெண்கள், தங்கள் குடும்பத்தின் வறுமையைப் போக்குவதற்காகக் கடினமான உழைக்கவும் வேண்டியிருக்கிறது.
- இயற்கைப் பேரிடர்களால் அப்பெண்களின் தொழில் பாதிக்கப்படும்போது, அவர்கள் கூடுதல் பணிச்சுமைக்கு ஆளாகிறார்கள்.
- இதனால் பிழைப்புத் தேடி வேறு, இடங்களுக்கு இடம்பெயரும் சூழலுக்கும் தள்ளப்படுகிறார்கள்.
- கடந்த சில ஆண்டுகளில் காலநிலை மாற்றத்தினால் இடம்பெயர்ந்தவர்களில் 80% பேர் பெண்களே என ஐ.நா. அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.
- பொருளாதாரத் தேவைக்காக இடம்பெயரும்போது குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, ஆண் குழந்தைகளைவிடப் பெண் குழந்தைகள் அதிகமாகப் பள்ளி இடைநிற்றலுக்கு உள்ளாவதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையம் (United Nations High Commissioner for Refugees) தெரிவிக்கிறது.

**விளிம்பு நிலைக்குத் தள்ளப்படும் பெண்கள்**

- உலகளவில் உணவு உற்பத்தியில் 50 முதல் 80% வரை பெண்களின் பங்களிப்பு உள்ளது. ஆனால், நில உடைமையாளர்களாக 10 சதவீதத்துக்கும் குறைவான எண்ணிக்கையிலான பெண்களே இருப்பதாகத் தரவுகள் கூறுகின்றன. ‘தேசியக் குடும்ப நல ஆய்வு -5’ சார்ந்த அறிக்கை,
- இந்தியாவில் பெண்களைவிட ஆண்கள் அதிகம் சொத்து வைத்திருப்பதாக் குறிப்பிடுகிறது. அந்த அறிக்கையின்படி, ஆண்களில் 62.5%, பெண்களில் 42.3% பேர் சொந்தமாக வீடு வைத்துள்ளனர்.
- 43.9% ஆண்களும், 31.7% பெண்களும் தங்கள் பெயரிலோ அல்லது மற்றொரு நபருடன் கூட்டாகவோ நிலத்தை உடைமையாக வைத்துள்ளனர்.
- இதன் காரணமாகக் காலநிலை மாற்றத்தின் விளைவுகளால் ஆண்களைவிடக் கூடுதலான பெண்கள் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படும் சாத்தியமும் அதிகரிக்கிறது.

**தண்ணீரைத் தேடி**

- காலநிலை மாற்றத்தினால், நன்னீரில் கடல் நீர் கலக்கும் நிகழ்வு அதிகமாகியுள்ளது. அதுவும் கடலோர மாவட்டங்களில் வறட்சிக் காலங்களில் தண்ணீருக்காக நெடுந்தொலைவு நடந்து செல்லும் பெண்களுக்குத் கருச்சிதைவு, கரு உருவாவதில் தாமதம் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன.

- வறட்சிமிக்க பகுதிகளில் வசிக்கும் பெண்கள் தண்ணீரைத் தேடியே பெரும்பாலான நேரத்தைச் செலவிடுவதால் மனதளவிலும், உடலளவிலும் நெருக்கடிக்கு உள்ளாகின்றனர்.
- இந்தியாவில், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் காலநிலை மாற்றத்தினால் தொடர்ச்சியாக உருவாகும் உணவுப் பஞ்சத்தால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.
- இந்த சூழலைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் நபர்கள், ஏழ்மையான குடும்பங்களைச் சேர்ந்த பெண்களைக் கடத்துதல், பாலியல் வன்கொடுமை செய்தல் போன்ற குற்றங்களை இழைக்கின்றனர்.
- மறுபக்கம், காலநிலை மாற்றப் பாதிப்பானது குடும்பங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தீவிரமடைய வைப்பதுடன், குழந்தைத் திருமணங்களை அதிகரிக்கச் செய்வதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு, காலநிலை மாற்றமானது சுற்றுச்சூழல் நெருக்கடியாக மட்டும் அல்லாமல், சமூக நெருக்கடியாகவும் உருமாறியுள்ளது.

**திட்டமிடல் வேண்டும்**

- காலநிலை மாற்றத்தினால் புவியின் ஆண்டு சராசரி வெப்பநிலை இயல்பைவிட, 1.1 டிகிரி செல்சியஸ் அதிகரித்துள்ளது.
- 2040 ஆம் ஆண்டுக்குள் இந்த வெப்பநிலை அதிகரிப்பு 1.5 டிகிரி செல்சியஸாக மாறக்கூடும் என்று அறிவியலாளர்கள் எச்சரித்துவருகின்றனர்.
- இதனால், புவியில் உயிரினங்கள் வாழ முடியாத சூழல் உருவாகலாம்; இதைக் கருத்தில் கொண்டே 2015இல் பாரிஸ் உடன்படிக்கையில் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது.
- ஆனால் அமெரிக்கா, ரஷ்யா, சீன நாடுகளின் மோதல் போக்கு, போர்கள் போன்றவற்றால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் உரிய வகையில் எடுக்கப்படவில்லை.
- காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் திட்டங்களை உலக நாடுகள் ஒருங்கிணைந்து முன்னெடுத்து, விளிம்பு நிலை மக்களின் துயரைப் போக்குவது காலத்தின் அவசியத் தேவை!

## வியாழன் கிரகத்து நிலவுக்கு விண்கலம் அனுப்பியது நாசா

- தொழிலதிபர் எலான் மஸ்குக்குச் சொந்தமான 'ஸ்பேஸ்-எக்ஸ்' நிறுவனத்தின் ஃபால்கன் ஹெவி பிளாக் 5 ராக்கெட் மூலம் ஃபுளோரிடா மாகாணம், கேப் கனாவெரலில் உள்ள ஏவுதளத்திலிருந்து அது விண்ணில் செலுத்தப்பட்டது.
- 'யூரேப்பா க்ளிப்பர்' என்று பெயரிடப்பட்டுள்ள அந்த விண்கலம், வியாழன் கிரகத்தை அடைவதற்கு ஐந்தரை வருடங்கள் ஆகும்.
- அதையடுத்து அந்த கிரகத்தின் சுற்றுப் பாதைக்குச் சென்று அதை சுற்றிவரத் தொடங்கும் அந்த விண்கலம், யூரோப்பா நிலவை 44 முறை நெருக்கமாகக் கடந்து ஆய்வுகளை மேற்கொள்ளும்.
- 1995 முதல் 2003 வரை வியாழனைச் சுற்றி வந்த நாசாவின் கலிலியோ விண்கலம், யூரோப்பாவில் பனிக்கட்டி படலத்துக்கு அடியில் பெருங்கடல்கள் இருக்கலாம் எனவும் அதில் உயிரினங்கள் வாழ்வதற்கான வாய்ப்புள்ளதாகவும் கண்டறிந்தது.
- அதன் தொடர்ச்சியாக, அந்த நிலவு குறித்து மேலும் ஆழமான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக குறிப்பாக அங்கு மனிதர்களைக் குடியமர்த்த முடியுமா என்று தெரிந்துகொள்வதற்காக யூரோப்பா, க்ளிப் விண்கலம் அனுப்பப்பட்டுள்ளது.
- தற்போது இத்தகைய ஆய்வுக்காக, பூமியின் நிலவைச் சுற்றிவரும் சந்திராயன் விண்கலத்தைப் போல யூரோப்பாவைச் சுற்றிவரும் விண்கலத்தை அனுப்புவதற்குத்தான் முதலில் திட்டமிடப்பட்டது.
- ஆனால், யூரோப்பாவின் சுற்றுப் பாதையில் அளவுக்கு அதிகமான கதிர்வீச்சு உள்ளது. அது, விண்கலத்தின் வாழ்நாளையும் செயல்திறனையும் பாதிக்கும்.
- எனவே நீண்ட காலம் ஆய்வு மேற்கொள்ளவும் பூமிக்கு தகவல்களை மிகத் திறனுடன் அனுப்புவதற்காகவும் வியாழன் கிரகத்தைச் சுற்றிவந்து யூரோப்பாவில் ஆய்வு மேற்கொள்ளும் வகையில் அந்தத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டது.

## 31 எம்கியூ-9பி ப்ரிடேட்டர் ட்ரோன்கள் கொள்முதல்: அமெரிக்காவுடன் இந்தியா ஒப்பந்தம்

- நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு எதிராக போர் புரிதல், கடல் பரப்பில் கண்காணிப்பு உள்பட பல்வேறு பணிகளை எம்க்யூ-9பி ஆயுதம் தாங்கிய ப்ரிடேட்டர் ட்ரோன்கள் மேற்கொள்ளும்.
- அதிக உயரத்தில் நீடித்து செயல்படும் அந்த ட்ரோன்கள், வானில் 35 மணி நேரத்துக்கும் மேலாக பறக்கக் கூடியவை.
- அந்த ட்ரோன்களால் 4 ஹெல்ஃபையர் வகை ஏவுகணைகள், சுமார் 450 கிலோ வெடிகுண்டுகளைச் சுமந்து செல்ல முடியும்.
- இந்நிலையில் அமெரிக்காவிடம் இருந்து 31 எம்க்யூ-9 பி ப்ரிடேட்டர் ட்ரோன்களை வாங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்புத் தளவாட கொள்முதல் கவுன்சில் கடந்த ஆண்டு ஒப்புதல் அளித்தது.
- 31 ட்ரோன்களில் இந்திய கடற்படைக்கு 15 ட்ரோன்கள், ராணுவம் மற்றும் விமானப் படைக்குத் தலா 8 ட்ரோன்கள் வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது.
- இலக்கைத் தாக்கி அழிக்கும் திறன்கொண்ட இந்த ட்ரோன்கள், சீனாவுடன் பகிர்ந்துகொள்ளப்படும் எல்லைக் கோட்டையொட்டிய பகுதியில் இந்தியாவின் கண்காணிப்பை அதிகரிக்கவும் பயன்படுத்தப்பட உள்ளன.